## 12.1 1997–98–அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – வழிகாட்டி நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (ஓ.ஊ.வ.தி.1) துறை

அரசாணை (நிலை ) எண். 149 நாள் : 08.05.1997

**ஆணை**

இந்தியாவின் முதுகெலும்பாகத் திகழும் கிராமங்கள் படிப்படியாக முன்னேற்றம் காணும் வகையில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒவ்வொராண்டும் ஒரு கிராமத்தை தேர்ந்தெடுத்து அதனை அனைத்து வசதிகளும் கொண்ட நவீன கிராமமாக அமைத்திடும் வகையில் இந்த நிதியாண்டு முதல் ''அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'' என்னும் கிராமப்புறத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் உடனடியாக செயல்படுத்தப்படும்.

2. இத்திட்டத்தின் நோக்கம், சமுதாயத்தில் உள்ள அனைத்துப் பிரிவினர்களுக்கும் அடிப்படை வசதிகள் மற்றும் அடிப்படை கட்டுமான வசதிகள் ஆகியவற்றை பல்வேறு திட்டங்களில் இருந்து ஒருங்கிணைத்து, தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில், செயல்படுத்தி ஒவ்வொரு கிராமமும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குமாறு அமைத்திடல் வேண்டும் என்பதாகும்.

3. ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் அத்தொகுதி உறுப்பினரே ஒவ்வொரு நிதி ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்துவதற்காக கிராமத்தை தேர்வு செய்வார்.

கீழ்குறிப்பிட்டிருக்கும் ஏழு வசதிகளை ஒவ்வொரு கிராம குடியிருப்புக்கும் வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

1) குடிநீர்
2) தொடக்கக் கல்வி.
3) பொது சுகாதாரம்
4) ஊட்டச்சத்து
5) குடியிருப்பு
6) கிராம சாலைகள் மற்றும் அவைகளின் இணைப்பு
7) நியாய விலைக் கடைகள்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்கள் மேற்குறிப்பிட்ட எல்லா குறைந்தபட்ச அடிப்படை வசதிகளிலும் எதிர்நோக்கும் இலக்கை அடைதல், சமுதாய நலத்திட்டங்களை செயல்படுத்துதல், அடிப்படை கட்டுமான சுகாதார வசதிகளை அளித்தல் ஆகியவைகள் இத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள் ஆகும். இதன் அடிப்படையில் இத்திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு கிராமத்திலும் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்.

**(1) குடிநீர் வசதி**

கிராமத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்குதல்.

**(2) கல்வி**

(அ) கல்விக்கு தேவையான அடிப்படை ஆதார வசதிகளான, தொடக்கப் பள்ளிக் கூடங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல், கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் பராமரித்தல், பள்ளிக் கூடங்களில் கழிவறை ஏற்படுத்துதல், நீர் வசதி வழங்குதல், தொடக்கப் பள்ளிகளுக்கு அருகில் இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை நிறுவுதல் போன்றவை.

(ஆ) எல்லா பெண் குழந்தைகளுக்கும் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயிற்றுவிப்பதை கண்காணித்தல்.

(இ) கிராம மக்களில் வயது வந்தோர் மற்றும் முறைசாரா கல்வி பயிற்றுவிப்பதற்காக திட்டங்கள் தயாரித்தல்.

(ஈ) கிராமங்களில் படிக்காதவர்களே இல்லை என்ற இலக்கை எய்துதல்.

**3. பொது சுகாதாரம்**

அ) கிராமங்களில் தொடக்க சுகாதார நிலையங்களில் 24 மணிநேரமும் மருந்துகள் வழங்குதல் மற்றும்

மருத்துவ வசதி அளித்தலுக்கு ஏற்ப எல்லா வசதிகளையும் வழங்குதல், தேவையாயின் சார்நிலை ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்தல்.

ஆ) நோய்தடுப்பு மற்றும் அம்மை தடுப்பூசி போடுதல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் எல்லா குழந்தைகளையும் தொற்று நோயிலிருந்து பாதுகாத்தல்.

இ) மகப்பேறுக்கு முன் மற்றும் மகப்பேறுக்கு பின் போதிய மருத்துவ வசதி அளித்தல்.

ஈ) குடும்பக் கட்டுபாட்டுத் திட்டங்களை பரவலாக்குதல் மற்றும் எய்ட்ஸ் ஆட்கொல்லி நோய் பரவுதல் தடுத்தல்.

உ) உடல் நலம் மற்றும் பல் மற்றும் கண் பாதுகாப்பிற்காக முறையான பரிசோதனை மேற்கொள்ளுதல்.

**4.சத்துணவு**

அ) எல்லா குழந்தைகளையும் மதிய சத்துணவுத் திட்டத்தின் கீழ் கொண்டு வருதல்.

ஆ) அடிப்படை ஆதார வசதிகளான சமையற் கூடங்கள் மற்றும் சத்துணவு கூடங்கள் அமைத்தல்.

இ) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டங்களின் கீழ், பிறந்ததில் இருந்து 36 மாதங்கள் வரை குழந்தைகளுக்கு பயனளித்தல்.

**5.குடியிருப்பு**

அ) இந்திரா குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு வீடுகள் கட்டித் தருதல்.

ஆ) ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், ஏற்கனவே கட்டப்பட்டுள்ள வீடுகளை மேம்படுத்துதல்.

இ) "ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு விளக்கு" திட்டத்தின் கீழ் எல்லா குடிசைகளுக்கும் மின் விளக்கு அளித்தல்.

**6.கிராமப்புறச் சாலைகள்**

அ) எல்லா சாலைகளையும் தார், கப்பி சாலையாக மேம்படுத்துதல்.

ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லா கிராமங்களுக்கும் பேருந்து வசதிகள் இணைப்பு வழங்குதல்.

**7. நியாய விலைக் கடைகள்**

(தேவையான) கிராமங்களில் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்துதல்.

8) சமூக நலத் திட்டங்களான மூவாலூர் இராமமிர்த அம்மையார் திட்டம், முத்துலட்சுமி ரெட்டி திட்டம், ஆதரவற்ற வயோதிகர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் போன்ற திட்டங்களில் தகுதி வாய்ந்த அனைவரும் பயன்பெறச் செய்தல்.

9) நிலங்களுக்கு பட்டா வழங்குதல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.

10) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு பட்டா வழங்குதல் மற்றும் இடுகாட்டிற்கான பாதை வசதிகள் செய்தல்.

11) கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வசதி செய்து தருதல்.

12) பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள்–

அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் வசதியை விரிவாக்குவது.

ஆ) ஊரக இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சித் திறனை மேம்படுத்துதல்.

இ) கால்நடைகள் வாங்குவதற்கு கடன் வசதியளித்தல், கால்நடைகளுக்கான மருத்துவ வசதிகள் மற்றும் பால் வளத்தினை பெருக்குவதற்கான நடவடிக்கைகள் எடுத்தல்.

ஈ) கிராமப்புற கைவினைஞர்கள் சிறிய மற்றும் குடிசைத் தொழில்களை தொடங்குவதற்கு ஏற்றவாறு கடன் வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

13) அடிப்படை வசதிகளாக தொலைபேசி மற்றும் துணை அஞ்சல் நிலையங்கள் ஆகியவற்றை தகுதி வாய்ந்த கிராமங்களுக்கு வழங்குதல்.

14) பொது பயிலும் அறை / நூலகம் மற்றும் தொலைக் காட்சிப் பெட்டி வசதி செய்து தருதல்.

15) கழிவுப் பொருட்களை மற்றும் கழிவு நீரை எல்லாத் தெருக்களிலும் அகற்றுவதற்கு வசதி செய்து தருதல்.

16) கிராமப்புற துப்புறவுத் திட்டத்தின் கீழ் எல்லா குடியிருப்புகளிலும் கழிப்பறைகள் கட்டுதல்.

17) பூரண மது விலக்கு அமுல்படுத்துதல்.

18) குழந்தை தொழிலாளர் ஒழித்தல்.

19) அனைத்து குடும்பங்களுக்கும் தலா ஒரு சேமிப்புக் கணக்கு துவக்க ஊக்குவித்தல்.

20) அனைத்து வீடுகளிலும் கழிவறை வசதி அமைத்தல்.

21) மரம் நடுதலை சேவை மனப்பான்மையுடன் ஊக்குவித்தல்.

6. இத்திட்டத்தின் ஒருங்கிணைந்த செயலாக்கத்திற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்டக்குழு ஒன்று கீழ்க்கண்டவாறு மாவட்ட ஆட்சித் தலைவரால் அமைக்கப்படும் :–

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித் தலைவர் | – | தலைவர் |
| 2. | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | – | உறுப்பினர் / செயலர். |
| 3. | திட்ட அலுவலர் மகளிர் திட்டம் | | |
| 4. | சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர். | | |
| 5. | சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர். | | |
| 6. | சம்பந்தப்பட்ட துறைகளில் மாவட்ட அளவிலான அதிகாரி. | | |

7. சட்டமன்ற உறுப்பினர் கிராமத்தை தேர்ந்தெடுத்தவுடன் இத்திட்டத்தை செயலாக்குவது குறித்த, அதாவது செலவினம் போன்றவற்றை மாவட்ட ஆட்சியர் அரசுக்கு அனுப்ப வேண்டும்.

8. இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்து ஒவ்வொரு மாதமும் ஒரு ஆய்வறிக்கையினை அந்த கிராமம் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். ஊரக வளர்ச்சி இயக்குநர் மாநிலம் முழுமைக்குமான ஒரு ஒருங்கிணைந்த அறிக்கையினை இரண்டு மாதத்திற்கு ஒரு முறை அரசுக்கு அனுப்ப வேண்டும்.

9. இத்திட்டம் ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் மாத இறுதிக்குள் முழுமையாக செயல்படுத்தப்பட வேண்டும்.

10.முன்பத்தி ஐந்தில் உள்ள திட்டங்கள் ஏற்கனவே பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படுபவை. ஆகையால் தனியாக நிதி ஒதுக்கீடு இல்லாமல் துறைத் திட்டங்களுக்கு இந்த கிராமங்களில் முன்னுரிமை அளிக்கப்படும்.

11. இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்துவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

12. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண். 116/JS(LSR)97, நாள்–08.05.1997 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.நாராயண்**
அரசு செயலர்